اَوَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ
الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ وَكَانُوْٓا اَشَدَّ مِنْهُمْ قُوَّةً ۭ وَمَا
كَانَ اللّٰهُ لِيُعْجِزَهٗ مِنْ شَيْءٍ فِى السَّمٰوٰتِ وَلَا فِى الْاَرْضِ ۭ
اِنَّهٗ كَانَ عَلِيْمًا قَدِيْرًا ﴿۴۴﴾ وَلَوْ يُؤَاخِذُ اللّٰهُ النَّاسَ بِمَا
كَسَبُوْا مَا تَرَكَ عَلٰى ظَهْرِهَا مِنْ دَآبَّةٍ وَّلٰكِنْ
يُّؤَخِّرُهُمْ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى ۚ فَاِذَا جَآءَ اَجَلُهُمْ فَاِنَّ
اللّٰهَ كَانَ بِعِبَادِهٖ بَصِيْرًا ﴿۴۵﴾ ع ۵ ۸ ۱۷

سُوْرَۃُ یٰسٓ مَکِّیَّۃٌ وَّھِیَ ثَلٰثٌ وَّثَمَانُوْنَ اٰیَۃً وَّخَمْسُ رُکُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يٰسٓ ﴿۱﴾ وَالْقُرْاٰنِ الْحَكِيْمِ ﴿۲﴾ اِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۳﴾ عَلٰى صِرَاطٍ
مُّسْتَقِيْمٍ ﴿۴﴾ تَنْزِيْلَ الْعَزِيْزِ الرَّحِيْمِ ﴿۵﴾ لِتُنْذِرَ قَوْمًا مَّآ اُنْذِرَ
اٰبَآؤُهُمْ فَهُمْ غٰفِلُوْنَ ﴿۶﴾ لَقَدْ حَقَّ الْقَوْلُ عَلٰٓى اَكْثَرِهِمْ فَهُمْ
لَا يُؤْمِنُوْنَ ﴿۷﴾ اِنَّا جَعَلْنَا فِيْٓ اَعْنَاقِهِمْ اَغْلٰلًا فَهِيَ اِلَى
الْاَذْقَانِ فَهُمْ مُّقْمَحُوْنَ ﴿۸﴾ وَجَعَلْنَا مِنْۢ بَيْنِ اَيْدِيْهِمْ
سَدًّا وَّمِنْ خَلْفِهِمْ سَدًّا فَاَغْشَيْنٰهُمْ فَهُمْ لَا يُبْصِرُوْنَ ﴿۹﴾

44. பூமியில் அவர்கள் சுற்றித்திரிந்து, அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை அவர்கள் காணவில்லையா? மேலும், அவர்கள் இவர்களைவிட பலத்தால் மிகக் கடினமானவர்களாக இருந்தனர்; (அவ்வாறிருந்தும், அல்லாஹ்வுடைய வேதனையிலிருந்து அவர்களால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.) மேலும், அல்லாஹ் _ அவனை இயலாமையில் ஆக்குவதற்கு வானங்களிலோ, பூமியிலோ எப்பொருளும் இருக்கவில்லை; நிச்சயமாக அவன் (யாவையும்) நன்கறிந்தவனாக, மிக்க ஆற்றலுடையோனாக இருக்கிறான்.

45. மேலும், மனிதர்களை அவர்கள் சம்பாதித்துக்கொண்டவைக்காகவேண்டி அல்லாஹ் பிடி(த்துத் தண்டி)ப்பதாக இருந்தால், (பூமியாகிய) அதன் முதுகின் மீது யாதொரு ஊர்ந்துதிரிபவற்றையும் அவன் விட்டுவைத்திருக்கமாட்டான்; எனினும், குறிப்பிடப்பட்ட தவணைவரை அவர்களை அவன் பிற்படுத்துகிறான்; ஆகவே அவர்களுடைய தவணை வந்து விட்டால் (அவர்களைப் பிடித்துவிடுவான்). எனவே நிச்சயமாக அல்லாஹ், தன் அடியார்களைப் பார்ப்பவனாக இருக்கிறான்.

---

அத்தியாயம் : 36

## யாஸீன்

வசனங்கள் : 83 மக்கீ ருகூஃகள் : 5

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. யா ஸீன்.

2. தீர்க்கமான (சட்டங்களையும் தெளிவான ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள) இந்தக் குர்ஆனின் மீது சத்தியமாக,

3. (நபியே!) நிச்சயமாக, நீர் (நம்முடைய) தூதர்களில் உள்ளவராவீர்.

4. (நீர்) நேரான வழியின் மீதிருக்கின்றீர்.

5. (இது யாவரையும்) மிகைத்தோன், மிகக் கிருபையுடையோனா(கிய அல்லாஹ்வினா)ல் இறக்கப்பட்டதாகும்.

6. தங்களின் மூதாதையர்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்படாத ஒரு சமூகத்தார்க்கு நீர் எச்சரிக்கை செய்வதற்காக (இவ்வேதம் இறக்கியருளப்பட்டது); அவர்கள் (அலட்சியமாக) மறந்தவர்களாக இருக்கிறார்கள்.

7. நிச்சயமாக இவர்களில் அநேகர் மீது (அவர்களுக்கு வேதனை உண்டு என்ற அல்லாஹ்வின்) வாக்கு உண்மையாகிவிட்டது; ஆகவே, அவர்கள் விசுவாசங் கொள்ளமாட்டார்கள்.

8. நிச்சயமாக நாம் அவர்களுடைய கழுத்துகளில் விலங்குச் சங்கிலிகளை ஆக்கிவிட்டோம்; அவை மோவாய்க் கட்டைகள் வரையில் இருக்கின்றன. ஆகவே, (குனிய முடியாதவாறு) அவர்கள் தலை உயர்த்தப்பட்டவர்கள்.

9. அவர்களுக்கு முன்னால் ஒரு தடுப்பையும், அவர்களுக்குப் பின்னால் ஒரு தடுப்பையும் நாம் ஆக்கி விட்டோம்; பின்னர், அவர்களை மூடிவிட்டோம்; ஆதலால், அவர்கள் (எதனையும்) பார்க்க(ச்சக்திபெற) மாட்டார்கள்.

وَسَوَآءٌ عَلَيۡهِمۡ ءَاَنۡذَرۡتَهُمۡ اَمۡ لَمۡ تُنۡذِرۡهُمۡ لَا يُؤۡمِنُوۡنَ ﴿۱۰﴾
اِنَّمَا تُنۡذِرُ مَنِ اتَّبَعَ الذِّكۡرَ وَخَشِىَ الرَّحۡمٰنَ بِالۡغَيۡبِ ۚ
فَبَشِّرۡهُ بِمَغۡفِرَةٍ وَّاَجۡرٍ كَرِيۡمٍ ﴿۱۱﴾ اِنَّا نَحۡنُ نُحۡىِ الۡمَوۡتٰى
وَنَكۡتُبُ مَا قَدَّمُوۡا وَاٰثَارَهُمۡ ؕ وَكُلَّ شَىۡءٍ اَحۡصَيۡنٰهُ فِىۡۤ
اِمَامٍ مُّبِيۡنٍ ﴿۱۲﴾ ع وَاضۡرِبۡ لَهُمۡ مَّثَلًا اَصۡحٰبَ الۡقَرۡيَةِ ۘ اِذۡ وقف غفران ع وقف لازم
جَآءَهَا الۡمُرۡسَلُوۡنَ ﴿۱۳﴾ اِذۡ اَرۡسَلۡنَاۤ اِلَيۡهِمُ اثۡنَيۡنِ فَكَذَّبُوۡهُمَا
فَعَزَّزۡنَا بِثَالِثٍ فَقَالُوۡۤا اِنَّاۤ اِلَيۡكُمۡ مُّرۡسَلُوۡنَ ﴿۱۴﴾ قَالُوۡا
مَاۤ اَنۡتُمۡ اِلَّا بَشَرٌ مِّثۡلُنَا ۙ وَمَاۤ اَنۡزَلَ الرَّحۡمٰنُ مِنۡ شَىۡءٍ ۙ
اِنۡ اَنۡتُمۡ اِلَّا تَكۡذِبُوۡنَ ﴿۱۵﴾ قَالُوۡا رَبُّنَا يَعۡلَمُ اِنَّاۤ اِلَيۡكُمۡ
لَمُرۡسَلُوۡنَ ﴿۱۶﴾ وَمَا عَلَيۡنَاۤ اِلَّا الۡبَلٰغُ الۡمُبِيۡنُ ﴿۱۷﴾ قَالُوۡۤا
اِنَّا تَطَيَّرۡنَا بِكُمۡ ۚ لَئِنۡ لَّمۡ تَنۡتَهُوۡا لَنَرۡجُمَنَّكُمۡ وَلَيَمَسَّنَّكُمۡ
مِّنَّا عَذَابٌ اَلِيۡمٌ ﴿۱۸﴾ قَالُوۡا طَآئِرُكُمۡ مَّعَكُمۡ ؕ اَئِنۡ
ذُكِّرۡتُمۡ ؕ بَلۡ اَنۡتُمۡ قَوۡمٌ مُّسۡرِفُوۡنَ ﴿۱۹﴾ وَجَآءَ مِنۡ اَقۡصَا
الۡمَدِيۡنَةِ رَجُلٌ يَّسۡعٰى قَالَ يٰقَوۡمِ اتَّبِعُوا الۡمُرۡسَلِيۡنَ ﴿۲۰﴾ ۙ
اتَّبِعُوۡا مَنۡ لَّا يَسۡـَٔلُكُمۡ اَجۡرًا وَّهُمۡ مُّهۡتَدُوۡنَ ﴿۲۱﴾

10. அவர்களுக்கு நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும், அல்லது அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யாமலிருப்பதும் அவர்களுக்குச் சமமே! ஆகவே, அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

11. நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதெல்லாம், (குர்ஆனாகிய) நல்லுபதேசத்தைப் பின்பற்றி, மறைவில் அர்ரஹ்மானை அஞ்சுகின்றாரே அவருக்குத்தான். ஆகவே, அ(த்தகைய)வருக்கு மன்னிப்பைக்கொண்டும், கண்ணியமாக கூலியைக்கொண்டும் நீர் நன்மாராயம் கூறுவீராக!

12. நிச்சயமாக நாமே, மரணித்தோரை (மறுமையில்) உயிர்ப்பிக்கிறோம்; அவர்கள் முற்படுத்தியவற்றையும், (அவர்கள் மரணித்த பின்னும் நன்மையைச் சேர்த்து வைக்கின்ற) அவர்களின் (நற்செயல்களான) அடிச்சுவடுகளையும் நாம் எழுதுகிறோம்; ஒவ்வொரு பொருளை(ப்பற்றி)யும், (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) தெளிவான ஏட்டில் அதைக்கணக்கெடுத்து(பதிந்து) வைத்திருக்கின்றோம்.

13. இன்னும் (நபியே!) ஓர் ஊர்வாசிகளை – அவ்வூராரிடம் (நம்மால்) அனுப்பப்பட்ட தூதர்கள் வந்த(போது நடந்த)தை – உதாரணமாக அவர்களுக்குக் கூறுவீராக!

14. நாம் அவர்களிடம் இரு தூதர்களை அனுப்பியபோது, அவ்விருவரையும் அவர்கள் பொய்யாக்கினார்கள்; ஆகவே, மூன்றாவது தூதரைக் கொண்டு (அவ்விருவரையும்) நாம் வலுப்படுத்தினோம்; ஆகவே, இவர்கள் "நிச்சயமாக நாங்கள் உங்களிடம் அனுப்பப்பட்ட (அல்லாஹ்வின் தூது) வர்களாவோம்" என்று கூறினார்கள்.

15. அ(தற்க)வர்கள், "நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களேயன்றி (வேறு) இல்லை; அர்ரஹ்மான் (உங்கள் மீது) யாதொன்றையும் இறக்கிவைக்கவுமில்லை; நீங்கள் பொய் சொல்கிறீர்களே தவிர வேறில்லை" என்று கூறினார்கள்.

16. அ(தற்க)வர்கள், "நிச்சயமாக நாங்கள் உங்களிடம் அனுப்பப்பட்ட (தூது)வர்கள்தாம் என்பதை எங்கள் இரட்சகனே நன்கறிவான்" என்று கூறினர்.

17. "மேலும், எங்கள் மீது ( அல்லாஹ்வுடைய தூதைப்) பகிரங்கமாக எத்திவைப்பதைத் தவிர (வேறு கடமை) இல்லை" ( என்றும் கூறினார்கள் ).

18. அ(தற்க)வர்கள், "நிச்சயமாக, நாங்கள் உங்களைத் துர்ச்சகுனமாகவே கருதுகின்றோம்; நீங்கள் (இதிலிருந்து) விலகிக் கொள்ளாவிடில், உங்களைத் திட்டமாக நாம் கல்லால் எறிவோம்; அன்றியும், எம்மிடமிருந்து துன்புறுத்தும் வேதனையும் உங்களைப் பிடித்துக் கொள்ளும்" என்று கூறினார்கள்.

19. (அதற்கு நம் தூதர்கள்,) "உங்களுடைய துர்ச்சகுனம் உங்களுடன்தான் இருக்கின்றது; (எங்கள் மூலம் அல்லாஹ்வைப் பற்றி) நீங்கள் (நற்போதனை செய்யப்பட்டு) நினைவூட்டப்பட்டீர்களானாலுமா? (துர்ச்சகுனமென்று கூறுவீர்கள்?) அவ்வாறல்ல! நீங்கள் வரம்பு மீறிய சமூகத்தார் என்று கூறினார்கள்.

20. மேலும், அப்பட்டணத்தின் கடைக் கோடியிலிருந்து ஒரு மனிதர் விரைந்தோடி வந்து (அப்பட்டணவாசிகளிடம்) "என்னுடைய சமூகத்தார்களே! நீங்கள் இத்தூதர்களைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார்.

21. "உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்காதவர்(களான இத்தூதர்)களை நீங்கள் பின்பற்றுங்கள்; மேலும், (இவர்கள் நேர்வழி போதனை செய்பவர்கள் மட்டுமல்ல,) இவர்கள் (அல்லாஹ்வினால்)நேர்வழிபெற்றவர்கள்" (என்றும் கூறினார்).

وَمَا لِيَ لَآ أَعۡبُدُ ٱلَّذِي فَطَرَنِي وَإِلَيۡهِ تُرۡجَعُونَ ﴿۲۲﴾
ءَأَتَّخِذُ مِن دُونِهِۦٓ ءَالِهَةً إِن يُرِدۡنِ ٱلرَّحۡمَٰنُ بِضُرّٖ لَّا تُغۡنِ عَنِّي
شَفَٰعَتُهُمۡ شَيۡـٔٗا وَلَا يُنقِذُونِ ﴿۲۳﴾ إِنِّيٓ إِذٗا لَّفِي ضَلَٰلٖ مُّبِينٍ ﴿۲۴﴾ إِنِّيٓ
ءَامَنتُ بِرَبِّكُمۡ فَٱسۡمَعُونِ ﴿۲۵﴾ قِيلَ ٱدۡخُلِ ٱلۡجَنَّةَۖ قَالَ يَٰلَيۡتَ قَوۡمِي
يَعۡلَمُونَ ﴿۲۶﴾ بِمَا غَفَرَ لِي رَبِّي وَجَعَلَنِي مِنَ ٱلۡمُكۡرَمِينَ ﴿۲۷﴾ وَمَآ
أَنزَلۡنَا عَلَىٰ قَوۡمِهِۦ مِنۢ بَعۡدِهِۦ مِن جُندٖ مِّنَ ٱلسَّمَآءِ وَمَا كُنَّا مُنزِلِينَ ﴿۲۸﴾
إِن كَانَتۡ إِلَّا صَيۡحَةٗ وَٰحِدَةٗ فَإِذَا هُمۡ خَٰمِدُونَ ﴿۲۹﴾ يَٰحَسۡرَةً عَلَى
ٱلۡعِبَادِۚ مَا يَأۡتِيهِم مِّن رَّسُولٍ إِلَّا كَانُواْ بِهِۦ يَسۡتَهۡزِءُونَ ﴿۳۰﴾ أَلَمۡ يَرَوۡاْ
كَمۡ أَهۡلَكۡنَا قَبۡلَهُم مِّنَ ٱلۡقُرُونِ أَنَّهُمۡ إِلَيۡهِمۡ لَا يَرۡجِعُونَ ﴿۳۱﴾ وَإِن
كُلّٞ لَّمَّا جَمِيعٞ لَّدَيۡنَا مُحۡضَرُونَ ﴿۳۲﴾ وَءَايَةٞ لَّهُمُ ٱلۡأَرۡضُ ٱلۡمَيۡتَةُ
أَحۡيَيۡنَٰهَا وَأَخۡرَجۡنَا مِنۡهَا حَبّٗا فَمِنۡهُ يَأۡكُلُونَ ﴿۳۳﴾ وَجَعَلۡنَا فِيهَا جَنَّٰتٖ
مِّن نَّخِيلٖ وَأَعۡنَٰبٖ وَفَجَّرۡنَا فِيهَا مِنَ ٱلۡعُيُونِ ﴿۳۴﴾ لِيَأۡكُلُواْ مِن
ثَمَرِهِۦ وَمَا عَمِلَتۡهُ أَيۡدِيهِمۡۚ أَفَلَا يَشۡكُرُونَ ﴿۳۵﴾ سُبۡحَٰنَ ٱلَّذِي خَلَقَ
ٱلۡأَزۡوَٰجَ كُلَّهَا مِمَّا تُنۢبِتُ ٱلۡأَرۡضُ وَمِنۡ أَنفُسِهِمۡ وَمِمَّا لَا يَعۡلَمُونَ ﴿۳۶﴾
وَءَايَةٞ لَّهُمُ ٱلَّيۡلُ نَسۡلَخُ مِنۡهُ ٱلنَّهَارَ فَإِذَا هُم مُّظۡلِمُونَ ﴿۳۷﴾

وقف غفران

ع ۲

22. "என்னைப் படைத்தானே அத்தகையவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன (இருக்கிறது) அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்."

23."அவனையன்றி வேறு வணங்கப்படுபவர்களை (என் வணக்கத்திற்குரியவர்களாக) நான் எடுத்துக் கொள்வேனா? அர்ரஹ்மான் யாதொரு இடரை எனக்கு நாடினால் இவர்களின் பரிந்துரை எதற்கும் எனக்குப் பயனளிக்காது; (அதிலிருந்து) என்னை இவர்கள் விடுவிக்கவும் மாட்டார்கள்."

24. "ஆகவே,(அல்லாஹ்வைத் தவிர்த்து இவர்களை வணங்கினால்) அப்போது நிச்சயமாக நான் பகிரங்கமான வழிகேட்டில் இருப்பேன்.

25. "நிச்சயமாக நான், உங்கள் இரட்சகனையே விசுவாசித்திருக்கிறேன்; ஆதலால், நீங்கள் எனக்குச் செவிசாயுங்கள்" (என்று கூறினார்).

26.(எனினும், அச்சமூகத்தார் அவரைக் கொலை செய்துவிட்டனர்; ஆகவே,) "நீர் சுவனபதியில் நுழைவீராக!" என (அவருக்கு)க்கூறப்பட்டது;(சுவனபதி நுழைந்த) அவர், "என்னுடைய சமூகத்தார் (எனக்குக் கிடைத்த இப்பாக்கியத்தை) அறிந்துகொள்ள வேண்டுமே" என்று கூறினார்.

27. "என் இரட்சகன் என்னை மன்னித்து மிக்க கண்ணியமானவர்களில் ஒருவனாகவும் என்னை ஆக்கிவிட்டான்" என்பதை (அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமே என்று கூறினார்).

28. மேலும், அ(வரைக் கொலை செய்த)தற்குப் பின்னர், அவருடைய சமூகத்தவர்மீது வானத்திலிருந்து (அவர்களை அழிக்க) யாதொரு படையையும் நாம் இறக்கிவைக்கவில்லை; (அவ்வாறு) இறக்கிவைப்பவர்களாகவும் நாம் இல்லை.

29. (அவர்களின் அழிவு) ஒரே ஒருபயங்கர சப்தத்தைத் தவிர வேறு இல்லை; அப்பொழுது அவர்கள் நூர்ந்து(சாம்பலாகி)விட்டவர்கள் ஆயினர்.

30. அடியார்கள் மீதுள்ள கைசேதமே! அவர்களிடம் எந்தத்தூதரும் _ அவரை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டவர்களாக இருந்தேயல்லாது வருவதில்லை.

31. "அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலை முறையினரை நாம் அழித்திருக்கிறோம்; நிச்சயமாக(அழிந்துவிட்ட) அவர்கள் இவர்கள்பால் திரும்பமாட்டார்கள்" என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?

32. மேலும், அவர்கள் அனைவரும் (விசாரணைக்காக) ஒன்று திரட்டப்பட்டு நம்மிடம் முன்னிலைப்படுத்தப்படுபவர்களே தவிர வேறில்லை.

33. இறந்த(பொட்டலான) பூமியும் இவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும்; அதனை நாம்(மழையைக்கொண்டு)உயிர்ப்பிக்கிறோம்;இன்னும்,அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகின்றோம்; அப்போது அதிலிருந்து(தான்) அவர்கள் உண்ணுகின்றார்கள்.

34. இன்னும், அதில் நாம் பேரீச்சை, திராட்சைகளிலிருந்து தோட்டங்களை அமைத்தோம்; அதில் நீரூற்றுக்களைப் பீறிட்டு ஓடவும் செய்கின்றோம்.

35. அதன் கனி(வர்க்கங்)களிலிருந்து அவர்கள் உண்ணுவதற்காக(இவைகளைப் படைத்தோம்); அவர்களுடைய கைகள் அதைச் செய்யவில்லை ; ஆகவே அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?

36. பூமி முளைப்பித்தவற்றிலிருந்தும்,(மனிதர்களாகிய) அவர்கள் தம்மிலிருந்தும், அவர்கள் அறியாதவற்றிலிருந்தும் ஜோடிகளை _ அவை ஒவ்வொன்றையும் படைத்தானே அவன் மிகத்தூய்மையானவன்.

37. இரவும் அவர்களுக்கோர் அத்தாட்சியாகும்; அதிலிருந்து பகலை நாம் கழற்றுகின்றோம்; அப்போது இவர்கள் இருளில் ஆகிவிடுகிறார்கள்.

وَالشَّمْسُ تَجْرِيْ لِمُسْتَقَرٍّ لَّهَا ۭ ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِ ﴿۳۸﴾ وَالْقَمَرَ
قَدَّرْنٰهُ مَنَازِلَ حَتّٰى عَادَ كَالْعُرْجُوْنِ الْقَدِيْمِ ﴿۳۹﴾ لَا الشَّمْسُ يَنْۢبَغِيْ
لَهَآ اَنْ تُدْرِكَ الْقَمَرَ وَلَا الَّيْلُ سَابِقُ النَّهَارِ ۭ وَكُلٌّ فِيْ فَلَكٍ
يَّسْبَحُوْنَ ﴿۴۰﴾ وَاٰيَةٌ لَّهُمْ اَنَّا حَمَلْنَا ذُرِّيَّتَهُمْ فِي الْفُلْكِ الْمَشْحُوْنِ ﴿۴۱﴾ ۙ
وَخَلَقْنَا لَهُمْ مِّنْ مِّثْلِهٖ مَا يَرْكَبُوْنَ ﴿۴۲﴾ وَاِنْ نَّشَاْ نُغْرِقْهُمْ فَلَا صَرِيْخَ
لَهُمْ وَلَا هُمْ يُنْقَذُوْنَ ﴿۴۳﴾ ۙ اِلَّا رَحْمَةً مِّنَّا وَمَتَاعًا اِلٰى حِيْنٍ ﴿۴۴﴾ وَاِذَا
قِيْلَ لَهُمُ اتَّقُوْا مَا بَيْنَ اَيْدِيْكُمْ وَمَا خَلْفَكُمْ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۴۵﴾ وَمَا
تَاْتِيْهِمْ مِّنْ اٰيَةٍ مِّنْ اٰيٰتِ رَبِّهِمْ اِلَّا كَانُوْا عَنْهَا مُعْرِضِيْنَ ﴿۴۶﴾ وَاِذَا
قِيْلَ لَهُمْ اَنْفِقُوْا مِمَّا رَزَقَكُمُ اللّٰهُ ۙ قَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلَّذِيْنَ اٰمَنُوْٓا
اَنُطْعِمُ مَنْ لَّوْ يَشَاۗءُ اللّٰهُ اَطْعَمَهٗٓ ڰ اِنْ اَنْتُمْ اِلَّا فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۴۷﴾
وَيَقُوْلُوْنَ مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۴۸﴾ مَا يَنْظُرُوْنَ
اِلَّا صَيْحَةً وَّاحِدَةً تَاْخُذُهُمْ وَهُمْ يَخِصِّمُوْنَ ﴿۴۹﴾ فَلَا يَسْتَطِيْعُوْنَ
تَوْصِيَةً وَّلَآ اِلٰٓى اَهْلِهِمْ يَرْجِعُوْنَ ﴿۵۰﴾ ع وَنُفِخَ فِي الصُّوْرِ فَاِذَا هُمْ ع ۳/۴
مِّنَ الْاَجْدَاثِ اِلٰى رَبِّهِمْ يَنْسِلُوْنَ ﴿۵۱﴾ قَالُوْا يٰوَيْلَنَا مَنْۢ بَعَثَنَا
مِنْ مَّرْقَدِنَا ۫ هٰذَا مَا وَعَدَ الرَّحْمٰنُ وَصَدَقَ الْمُرْسَلُوْنَ ﴿۵۲﴾ وقف لازم وقف منزل وقف غفران

38. சூரியனும் அதற்குரிய தங்குமிடத்தின்பால் அது சென்று கொண்டிருக்கிறது; இது(யாவரையும்) மிகைத்தவன், நன்கறிந்தவன் ஏற்படுத்தியதாகும்.

39. இன்னும், சந்திரனை_(உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்சங் குலையின் குச்சி போல் அது மீண்டுவிடும்வரையில், அதற்கு நாம் பல தங்குமிடங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

40. சூரியன்_ அதற்குச் சந்திரனை (அணுகி)ப்பிடிக்கமுடியாது; இரவு, பகலை முந்தவும் முடியாது. (இவ்வாறே கிரகங்கள், நட்சத்திரங்கள்) ஒவ்வொன்றும் (தனது) வட்டத்துக்குள் நீந்திச்செல்கின்றன.

41. இன்னும், நாம் அவர்களுடைய சந்ததியினரை, (சகலவற்றாலும்) நிரப்பப்பட்ட கப்பலில் நாம் ஏற்றி(ச்சுமந்து காப்பாற்றி)னோம் என்பதும் இவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும்.

42. அதைப் போன்று அவர்கள் ஏறிச் செல்கின்றவைகளையும் நாம் அவர்களுக்காகப் படைத்திருக்கின்றோம்.

43. மேலும், நாம் நாடினால், அவர்களை(க் கடலில்) மூழ்கடித்துவிடுவோம்; அதுசமயம்(அபயக் குரலிடும்) அவர்களைக் காப்பாற்றுவோர் ஒருவருமிரார்; அவர்கள் விடுவிக்கப்படவும் மாட்டார்கள்.

44. என்றாலும் நம்மிடமிருந்துள்ள அருளால் (கடலிலும் கரையிலும் நாம் நடத்திச்செல்கிறோம்) இன்னும் ஒரு காலம் வரை அவர்கள் சுகமனுபவிப்பதற்காக (விட்டும் வைக்கிறோம்).

45. "இன்னும், நீங்கள் கிருபைசெய்யப்படுவதற்காக, உங்களுக்கு முன் இருப்பதையும், உங்களுக்குப் பின் இருப்பதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்பட்டால் (அதனை அவர்கள் பொருட்படுத்துவதில்லை).

46. இன்னும், அவர்களுடைய இரட்சகனின் அத்தாட்சிகளில் எந்த ஓர் அத்தாட்சியும் அதனை அவர்கள் புறக்கணிக்கக்கூடியவர்களாக இருந்தே தவிர அவர்களிடம் வருவதில்லை.

47. மேலும், "அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்திருப்பவற்றிலிருந்து செலவு செய்யுங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், "அல்லாஹ் நாடியிருந்தால் எவர்களுக்கு அவன் உணவளித்துவிடுவானோ, அவர்களுக்கு நாங்கள் உணவளிப்போமா? நீங்கள் பகிரங்கமான வழிகேட்டிலன்றி வேறில்லை" என்று விசுவாசிகளிடம் நிராகரிப்போர் (பரிகாசமாகக்) கூறுகின்றனர்.

48. "நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் (நீங்கள் கூறும் தண்டனை பற்றிய) அந்த வாக்குறுதி எப்பொழுது (வரும்)?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

49. ஒரே ஒரு (பெரும்) சப்தத்தைத் தவிர (வேறு எதையும்) அவர்கள் எதிர்பார்(த்திரு)க்கவில்லை! (இதனைப் பற்றி) அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும் நிலையில் அது அவர்களைப் பிடித்துக்கொள்ளும்.

50. அப்போது அவர்கள் (தங்களுக்குரிய சாதக, பாதகம்பற்றிய) மரணோபதேசம் கூற சக்தியும் பெறமாட்டார்கள்; தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்லவும் மாட்டார்கள் (அதற்குள் அழிந்துவிடுவார்கள்).

51. மேலும், (ஸூர் எனும்) குழல் ஊதப்படும்; உடனே அவர்கள் சமாதிகளிலிருந்து (வெளியேறி) தங்கள் இரட்சகன்பால் விரைந்து நடப்பார்கள்.

52. (அந்நாளின் அமளியைக் கண்டு மதியிழந்து) "எங்களுடைய நாசமே! எங்களை, எங்கள் (சமாதிகளாகிய) தூங்குமிடங்களிலிருந்து எழுப்பியவர் யார்?" என்று கேட்பார்கள்; (அதற்கு மலக்குகள் அவர்களிடம்) "அர்ரஹ்மான் (உங்களுக்கு) வாக்களித்ததும், தூதர்கள் (உங்களுக்கு) உண்மை (என எடுத்துக்) கூறியதும் இது தான்" (என்று கூறுவார்கள்).

إِنْ كَانَتْ إِلَّا صَيْحَةً وَّاحِدَةً فَإِذَا هُمْ جَمِيعٌ لَّدَيْنَا مُحْضَرُونَ ۝۵۳
فَالْيَوْمَ لَا تُظْلَمُ نَفْسٌ شَيْئًا وَّلَا تُجْزَوْنَ إِلَّا مَا كُنتُمْ تَعْمَلُونَ ۝۵۴ إِنَّ
أَصْحٰبَ الْجَنَّةِ الْيَوْمَ فِي شُغُلٍ فٰكِهُونَ ۝۵۵ هُمْ وَأَزْوٰجُهُمْ فِي ظِلٰلٍ
عَلَى الْأَرَآئِكِ مُتَّكِـُٔونَ ۝۵۶ لَهُمْ فِيهَا فٰكِهَةٌ وَّلَهُمْ مَّا يَدَّعُونَ ۝۵۷
سَلٰمٌ قَوْلًا مِّن رَّبٍّ رَّحِيمٍ ۝۵۸ وَامْتٰزُوا الْيَوْمَ أَيُّهَا الْمُجْرِمُونَ ۝۵۹
أَلَمْ أَعْهَدْ إِلَيْكُمْ يٰبَنِي آدَمَ أَن لَّا تَعْبُدُوا الشَّيْطٰنَ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ
مُّبِينٌ ۝۶۰ وَّأَنِ اعْبُدُونِي هٰذَا صِرٰطٌ مُّسْتَقِيمٌ ۝۶۱ وَلَقَدْ أَضَلَّ وقف غفران
مِنكُمْ جِبِلًّا كَثِيرًا أَفَلَمْ تَكُونُوا تَعْقِلُونَ ۝۶۲ هٰذِهٖ جَهَنَّمُ الَّتِي
كُنتُمْ تُوعَدُونَ ۝۶۳ اِصْلَوْهَا الْيَوْمَ بِمَا كُنتُمْ تَكْفُرُونَ ۝۶۴ اَلْيَوْمَ
نَخْتِمُ عَلٰى أَفْوٰهِهِمْ وَتُكَلِّمُنَا أَيْدِيهِمْ وَتَشْهَدُ أَرْجُلُهُمْ بِمَا كَانُوا
يَكْسِبُونَ ۝۶۵ وَلَوْ نَشَآءُ لَطَمَسْنَا عَلٰى أَعْيُنِهِمْ فَاسْتَبَقُوا الصِّرٰطَ فَأَنّٰى
يُبْصِرُونَ ۝۶۶ وَلَوْ نَشَآءُ لَمَسَخْنٰهُمْ عَلٰى مَكَانَتِهِمْ فَمَا اسْتَطٰعُوا
مُضِيًّا وَّلَا يَرْجِعُونَ ۝۶۷ وَمَنْ نُّعَمِّرْهُ نُنَكِّسْهُ فِي الْخَلْقِ أَفَلَا ع ۴ / ۲
يَعْقِلُونَ ۝۶۸ وَمَا عَلَّمْنٰهُ الشِّعْرَ وَمَا يَنۢبَغِي لَهُ إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ وَّقُرْآنٌ
مُّبِينٌ ۝۶۹ لِّيُنذِرَ مَن كَانَ حَيًّا وَّيَحِقَّ الْقَوْلُ عَلَى الْكٰفِرِينَ ۝۷۰

53. அது ஒரே ஒரு (பெரும்) சப்தத்தைத் தவிர (வேறொன்றுமாக) இருக்காது; அப்பொழுது அவர்கள் அனைவரும் நம்மிடம் (ஒன்றுதிரட்டப்பட்டு கேள்வி கணக்கிற்காக)முன்னிலைப்படுத்தப்பட்டுவிடுபவர்களாவர்.

54. எனவே, அந்நாளில், எந்த ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்பட மாட்டாது; இன்னும், நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளுக்கன்றி (வேறு எதற்கும்) நீங்கள் கூலிகொடுக்கப்படமாட்டீர்கள்.

55. நிச்சயமாக சுவனவாசிகள் அந்நாளில் தங்கள் காரியத்தில் மகிழ்ச்சியுடையோராக இருப்பர்.

56. அவர்களும், அவர்களுடைய மனைவியரும் நிழல்களில் (உள்ள) கட்டில்களின் மேல் (வெகு உல்லாசமாக) சாய்ந்தவர்களாக இருப்பார்கள்.

57. அதில் அவர்களுக்கு (விதவிதமான) கனிவர்க்கங்களுண்டு; இன்னும், அவர்கள் வேண்டுவன(யாவும்)அவர்களுக்குண்டு.

58. (அவர்களை நோக்கி) நிகரற்ற அன்புடைய இரட்சகனின் சொல்லாக "சாந்தி உண்டாகுக!"(என்று கூறுதல்) உண்டு.

59. மேலும், "குற்றவாளிகளே! இன்றையத்தினம் நீங்கள் (நல்லோரிலிருந்து) பிரிந்து விடுங்கள்" (என்று கூறப்படும்).

60. "ஆதமுடைய மக்களே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி "என்று நான் உங்களிடம் உறுதி மொழி வாங்கவில்லையா?

61. " என்னையே நீங்கள் வணங்குங்கள், இதுதான் நேரான வழியாகும் (என்றும் நான் உங்களிடம் உறுதி மொழி வாங்கவில்லையா?).

62. "உங்களில் பெருந்தொகையினரை அவன் நிச்சயமாக வழிகெடுத்தும்விட்டான்; இதனை நீங்கள் விளங்கிக் கொள்பவர்களாக இருக்கவில்லையா?

63. "இதுதான் நீங்கள் வாக்களிக்கப்பட்டிருந்தீர்களே அந்த நரகம்.

64. "(இதனை) நீங்கள் நிராகரித்துக்கொண்டிருந்ததன் காரணமாக, இன்றையத்தினம் இதில் நீங்கள் நுழைந்துவிடுங்கள்" (என்று கூறப்படும்).

65. இன்றையத் தினம் நாம் அவர்களுடைய வாய்களின் மீது முத்திரையிட்டுவிடுவோம்; அன்றியும், அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவைகளைப்பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும்; அவர்களுடைய கால்களும் சாட்சி கூறும்.

66. மேலும், நாம் நாடியிருந்தால் அவர்களுடைய கண்களைப் போக்கி (குருடாக்கி)யிருப்போம்; பின்னர் (தப்பித்துக்கொள்ளும்)வழியின்பால் (அதைக்கடக்க) முந்தியிருப்பார்கள்; அப்போது (அவர்கள் உண்மைவழியை)எவ்வாறு பார்ப்பார்கள்?

67. இன்னும், நாம் நாடியிருந்தால், அவர்கள் இருந்த இடத்திலேயே அவர்கள் உருவத்தை மாற்றி (கல்லாகவோ, மற்ற ஜடப் பொருளாகவோ ஆக்கி)யிருப்போம். அது சமயம், அவர்கள் முன் செல்லவும் சக்திபெறமாட்டார்கள்; பின் திரும்பவும் மாட்டார்கள்.

68. எவரை நாம் (வயோதிகராக்கி) வயதை நீட்டிவிடுகிறோமோ அவரை, படைப்பில் (வாலிபத்திற்குப்பிறகு முதுமையையும், பலத்திற்குப்பிறகு பலவீனத்தையும் கொடுத்து), தலைகீழாக மாற்றி விடுகின்றோம். (இதனை) அவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்களா?

69. (நம்முடைய தூதராகிய) அவருக்கு நாம் கவிதையை (இயற்ற)க் கற்றுக் கொடுக்கவுமில்லை; அது அவருக்கு அவசியமானதுமல்ல; இது நல்லுபதேசமும், தெளிவான குர்ஆனுமே தவிர (வேறு) இல்லை.

70. அ(க்குர்ஆனான)து, உயிரோடு(உண்மையை ஏற்று பொய்யை மறுக்கும் உள்ளத்துடன்) இருப்பவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நிராகரிப்போர் மீது (தண்டனையைப் பற்றிய) வாக்கை உறுதிப்படுத்துவதற்காகவும் (இறக்கப்பட்டது).

اَوَلَمْ يَرَوْا اَنَّا خَلَقْنَا لَهُمْ مِّمَّا عَمِلَتْ اَيْدِيْنَآ اَنْعَامًا فَهُمْ لَهَا مٰلِكُوْنَ ﴿۷۱﴾
وَذَلَّلْنٰهَا لَهُمْ فَمِنْهَا رَكُوْبُهُمْ وَمِنْهَا يَاْكُلُوْنَ ﴿۷۲﴾ وَلَهُمْ فِيْهَا مَنَافِعُ
وَمَشَارِبُ ؕ اَفَلَا يَشْكُرُوْنَ ﴿۷۳﴾ وَاتَّخَذُوْا مِنْ دُوْنِ اللّٰهِ اٰلِهَةً لَّعَلَّهُمْ
يُنْصَرُوْنَ ﴿۷۴﴾ لَا يَسْتَطِيْعُوْنَ نَصْرَهُمْ ۙ وَهُمْ لَهُمْ جُنْدٌ مُّحْضَرُوْنَ ﴿۷۵﴾ فَلَا
يَحْزُنْكَ قَوْلُهُمْ ۘ اِنَّا نَعْلَمُ مَا يُسِرُّوْنَ وَمَا يُعْلِنُوْنَ ﴿۷۶﴾ اَوَلَمْ يَرَ الْاِنْسَانُ — وقف لازم
اَنَّا خَلَقْنٰهُ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ مُّبِيْنٌ ﴿۷۷﴾ وَضَرَبَ لَنَا مَثَلًا وَّ
نَسِيَ خَلْقَهٗ ؕ قَالَ مَنْ يُّحْيِ الْعِظَامَ وَهِيَ رَمِيْمٌ ﴿۷۸﴾ قُلْ يُحْيِيْهَا الَّذِيْٓ
اَنْشَاَهَآ اَوَّلَ مَرَّةٍ ؕ وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيْمُۨ ﴿۷۹﴾ الَّذِيْ جَعَلَ لَكُمْ مِّنَ
الشَّجَرِ الْاَخْضَرِ نَارًا فَاِذَآ اَنْتُمْ مِّنْهُ تُوْقِدُوْنَ ﴿۸۰﴾ اَوَلَيْسَ الَّذِيْ
خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ يَّخْلُقَ مِثْلَهُمْ ؔ بَلٰى ۗ وَهُوَ — وقف غفران ۱۲
الْخَلّٰقُ الْعَلِيْمُ ﴿۸۱﴾ اِنَّمَآ اَمْرُهٗٓ اِذَآ اَرَادَ شَيْـًٔا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿۸۲﴾
فَسُبْحٰنَ الَّذِيْ بِيَدِهٖ مَلَكُوْتُ كُلِّ شَيْءٍ وَّاِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿۸۳﴾ ع — ع ۵

## سُوْرَۃُ الصّٰفّٰتِ مَکِّیَّۃٌ وَّھِیَ مِائَۃٌ وَّاثْنَتَانِ وَّثَمَانُوْنَ اٰیَۃً وَّخَمْسُ رُکُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالصّٰٓفّٰتِ صَفًّا ﴿۱﴾ فَالزّٰجِرٰتِ زَجْرًا ﴿۲﴾ فَالتّٰلِيٰتِ ذِكْرًا ﴿۳﴾ — المنزل ۶

71. நம்முடைய கைகள் செய்தவற்றிலிருந்து நிச்சயமாக நாம் அவர்களுக்காக (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகளைப் படைத்திருக்கின்றோம் என்பதை அவர்கள் காணவில்லையா? பின்னர், அவர்கள் அவற்றுக்கு உரிமையாளர்களாக இருக்கின்றார்கள்.

72. அவைகளை, (இலகுவான முறையில்) அவர்களுக்குக் கீழ்ப்படியும்படியும் நாம் செய்தோம்; அவைகளில், அவர்கள் (வாகனமாக) ஏறக்கூடியவைகளும் இருக்கின்றன; அவர்கள் அவற்றிலிருந்து உண்ணவும் செய்கிறார்கள்.

73. இன்னும் அநேகபயன்களும், பானங்களும் அவர்களுக்கு அவைகளில் இருக்கின்றன; எனவே, அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?

74. இன்னும், அல்லாஹ்வையன்றி (அவற்றால்) தங்களுக்கு உதவிசெய்யப்படக்கூடும் என்பதற்காக, அவர்கள் (வணக்கத்திற்குரிய வேறு) தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

75. (ஆனால்) அவர்கள், அவர்களுக்கு உதவி செய்யும் ஆற்றல் பெற மாட்டார்கள்; (ஆயினும் மறுமையில்) அவர்கள் இவர்களுக்கு (எதிராகச் சாட்சிகூற) முன்னிலைப்படுத்தப்படும் படையினராவர்.

76. (நபியே! உமக்கு விரோதமாகக் கூறப்படும்) அவர்களுடைய கூற்று உம்மைக் கவலைக்குள்ளாக்கவேண்டாம்; நிச்சயமாக, அவர்கள் (தங்கள் இதயங்களில்) மறைத்திருப்பதையும், அவர்கள் வெளிப்படுத்துவதையும் நாம் நன்கறிவோம்.

77. மனிதன் _ அவனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து நிச்சயமாக நாம் படைத்தோம் என்பதை _ அவன் பார்க்கவில்லையா? பின்னர் திடீரென அவன், பகிரங்கமாகத் தர்க்கிக்கக் கூடியவனாக இருக்கிறான்.

78. மேலும், அவன் தன்னுடைய படைப்பை (தான் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பதை) மறந்துவிட்டு, ஓர் உதாரணத்தையும் நமக்காக அவன் கூறுகிறான்; "எலும்புகளை, அவை மக்கிப்போன நிலையில் உயிருட்டுபவன் யார்?" என்று அவன் கேட்கிறான்.

79. (நபியே! அதற்கு) நீர் கூறுவீராக: "முதன் முறையில் அதனைப் படைத்தானே அத்தகையவனே அதனை உயிர்ப்பிப்பான்; அவன் ஒவ்வொரு படைப்பைப்பற்றியும் நன்கறிகிறவன்."

80. அவன் எத்தகையவனென்றால், உங்களுக்காக பசுமையான மரத்திலிருந்து நெருப்பை உண்டாக்கினான்; அப்போது அதிலிருந்து நீங்கள் (நெருப்பை) மூட்டுகிறீர்கள்.

81. வானங்களையும், பூமியையும் படைத்தானே அத்தகையவன், அவர்களைப் போன்றதைப் படைக்கச் சக்திபெற்றவனாக இல்லையா? ஏன் இல்லை? (அவனே ஆற்றலுடையவன்.) நிச்சயமாக, அவனே மிகப் பெரும் படைப்பாளன், நன்கறிகிறவன்.

82. அவன் யாதொரு பொருளை (ப் படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் "ஆகுக!" எனக் கூறுவதுதான் உடனே அது ஆகிவிடும்.

83. ஆகவே, சகலவற்றின் அதிகாரம் (ஆட்சி) எவனுடைய கைவசம் இருக்கின்றதோ அத்தகையவனே மிகப் பரிசுத்தமானவன்; மேலும் அவன்பாலே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்.

---

அத்தியாயம் : 37

## அஸ்ஸாஃப்ஃபாத் _ அணியினர்

வசனங்கள் : 182 மக்கீ ருகூஉகள் : 5

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. அணியாக அணிவகுத்து நிற்போர் மீது சத்தியமாக,
2. தீவிரமாக விரட்டுவோர் மீது சத்தியமாக,
3. (அல்லாஹ்வின்) வேதத்தை ஓதுவோர் மீது சத்தியமாக,